# வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது ஜிஎஸ்எல்வி எஃப்-12

சென்னை, மே 29: போக்குவரத்து வழிகாட்டுதலுக்கான என்விஎஸ்-01 செயற்கைக்கோளுடன் ஜிஎஸ்எல்வி எஃப்-12 ராக்கெட் வெற்றிகரமாக திங்கள்கிழமை (மே 29) விண்ணில் செலுத்தப்பட்டது.

ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஆராய்ச்சி மையத்தின் இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து காலை 10.42 மணிக்கு செலுத்தப்பட்ட அந்த ராக்கெட் திட்டமிட்டபடி இலக்கை அடைந்ததைத் தொடர்ந்து, அத்திட்டம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து விஞ்ஞானிகள் பரஸ்பரம் வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டனர்.

தரைவழி, கடல்வழி மற்றும் வான்வழிப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு பயன்பாட்டுக்காக 'இந்திய மண்டல வழிகாட்டுதல் செயற்கைக்கோள் அமைப்பு' என்ற கட்டமைப்பை (ஐஆர்என்எஸ்எஸ்) உருவாக்க இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) முடிவு செய்தது. இதன்மூலம் இந்தியாவின் பயன்பாட்டுக்கென பிரத்யேக வழிகாட்டுதல் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டு, செயல்பாட்டில் இருந்து வருகிறது.

அதன்படி, ரூ.1,420 கோடி செலவில் ஐஆர்என்எஸ்எஸ் 1ஏ, 1பி, 1சி, 1டி, 1இ, 1எப், 1ஜி என 7 வழிகாட்டு செயற்கைக்கோள்கள் வடிவமைக்கப்பட்டு கடந்த 2013 முதல் 2016-ஆம் ஆண்டு வரையான காலகட்டங்களில் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டன.

அவற்றில், குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு செயலிழந்த செயற்கைக்கோள்களுக்கு மாற்றாக புதிய செயற்கைக்கோள்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், ஐஆர்என்எஸ்எஸ் 1-ஜி செயற்கைக்கோளுக்கு மாற்றாக என்விஎஸ்-01 செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்தது. அதை ஜிஎஸ்எல்வி எஃப்-12 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த முடிவு செய்தது.

அதற்கான இறுதிக்கட்டப் பணிகள் நிறைவடைந்து 27.30 மணி நேர கவுன்ட்டவுன் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. அதன் தொடர்ச்சியாக ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து திங்கள்கிழமை அந்த ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது.

தரையில் இருந்து புறப்பட்ட 19 நிமிஷத்துக்குப் பிறகு 251 கிலோ மீட்டர் உயரத்தில் திட்டமிட்ட புவி வட்டப் பாதையில் வெற்றிகரமாக என்விஎஸ்-01 செயற்கைக்கோள் நிலைநிறுத்தப்பட்டது. இந்தச் செயற்கைக்கோளானது இரண்டாம் தலைமுறை தொழில்நுட்பத்தில் மேம்படுத்தப்பட்ட நவீன வசதிகளுடன் வடிவமைக்கப்பட்ட ஒன்றாகும். 2,232 கிலோ எடைகொண்ட அதன் ஆயுட்காலம் 12 ஆண்டுகள்.

இந்தச் செயற்கைக்கோளில் எல் 1, எல்5 மற்றும் எஸ் பேண்ட் அலைவரிசை, ரூபிடியம் அணுக் கடிகாரம் உள்ளிட்ட நவீன நுட்பங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. அதிலும், குறிப்பாக முதல்முறையாக வடிவமைக்கப்பட்ட 'எல் 1 பேண்ட்' அலைவரிசை மூலம் இடங்களை அறிதல், வழிகாட்டுதல், கால அளவு ஆகியவற்றை துல்லியமாகப் பெற முடியும்.

அதேபோன்று அணுக் கடிகாரத்தின் துணையுடன் தரை, வான் மற்றும் கடல் வழிப் போக்குவரத்துக்கான வழிகாட்டுதல்களைச் சரியாக அறிய முடியும். இதுவரை வெளிநாடுகளின் அணுக் கடிகார நுட்பத்தையே இஸ்ரோ பயன்படுத்தி வந்தது. தற்போது முதல் முறையாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அணுக் கடிகாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. குஜராத் அகமதாபாதில் உள்ள இஸ்ரோவின் 'ஸ்பேஸ் அப்ளிகேஷன்ஸ்' மையத்தில் இந்தக் கடிகாரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**என்னென்ன சேவைகள்?:** வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டுள்ள என்விஎஸ்-01 செயற்கைக்கோள் வாயிலாக வழிகாட்டுதல் மட்டுமல்லாது கடலில் மீன் வளம் உள்ள இடங்கள், அதிக மகசூல் தரக்கூடிய வேளாண் நிலங்களைக் கண்டறிதல், நில அளவைப் பணிகள், கைப்பேசி செயலி வழியாக ஓரிடத்தின் தகவல்கள், அவசர சேவைகள், கப்பல் மேலாண்மை உள்ளிட்டவற்றையும் பெற முடியும் என இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## வழிகாட்டி செயற்கைக்கோள் நிலைநிறுத்தம்



### சிறப்பம்சங்கள்...

- அமெரிக்காவின் ஜி.பி.எஸ். போல் இந்தியாவுக்கான பிரத்யேக வழிகாட்டு அமைப்பான 'நேவிக்' (வழிகாட்டு)தொழில்நுட்பத்தை செயல்படுத்தும் வகையில் என்.வி.எஸ்.-01 ஏவப்பட்டுள்ளது.
- நேவிக் தொழில்நுட்பம், இந்திய பரப்பின் மீது நேரடியாக செயல்படுவதால் ஜி.பி.எஸ்.-ஐ விட துல்லியமாக செயல்படும்.
- எல்-1,எல் 5, எஸ். போன்ற அதிக அலைவரிசை பேண்ட்களை பயன்படுத்தும் 5- ஆவது நாடு என்ற சிறப்பை இந்தியா பெறுகிறது.
- கார்கில் போர் சமயத்தில் இந்தியா கேட்ட சிறப்பு ஜி.பி.எஸ். சேவை அமெரிக்காவால் மறுக்கப்பட்டது. நேவிக் தொழில் நுட்பம் நடைமுறைக்கு வந்தால போர்க்காலங்களில் ராணுவத்துக்கு அது துணை புரியும்.



போக்குவரத்து வழிகாட்டுதலுக்கான என்விஎஸ்-01 செயற்கைக்கோளுடன் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்த 'ஜிஎஸ்எல்வி எஃப்-12 ராக்கெட்.

## ஜூலையில் சந்திரயான் 3, ககன்யான்: இஸ்ரோ தலைவர் சோம்நாத்



சோமநாத

ஜூலை மாதத்தில் சந்திரயான் – 3 திட்டத்தையும், மனிதர்களை விண்ணுக்கு அனுப்புவதற்கான ககன்யான் சோதனைத் திட்டத்தையும் செயல்படுத்த உள்ளதாக இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஜிஎஸ்எல்வி எஃப்-10 ராக்கெட் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, அதுகுறித்து ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டது. ராக்கெட்டின் கிரையோஜெனிக் நிலையில் கசிவு இருந்ததால்தான் அத்திட்டத்தில் தோல்வி ஏற்பட்டதாக அந்தக் குழு அறிக்கை சமர்ப்பித்தது. அந்தத் தோல்வியில் இருந்து பாடம் கற்றுக் கொண்டதன் மூலம் ஜிஎஸ்எல்வி எஃப்-12 ராக்கெட் தற்போது வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

இந்த என்விஎஸ் வகை நுட்பத்தில் மொத்தம் 5 செயற்கைக்கோள்கள் அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளன. மீதமுள்ள 4 செயற்கைக்கோள்கள் 6 மாதத்துக்கு ஒன்று வீதம் அனுப்பப்படும். இந்தச் செயற்கைக்கோள் மூலம் நம் நாட்டுக்குத் தேவையான தகவல்களை அதிக அளவில் பெற முடியும்.

அடுத்து ஜிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் இன்சாட் 3டிஎஸ் செயற்கைக்கோளை காலநிலை மாற்றம் குறித்து ஆய்வு செய்ய அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, இஸ்ரோ – நாசா இணைந்து நிசார் என்ற திட்டத்தை செயல்படுத்த உள்ளன. தொடர்ந்து ஜிஎஸ்எல்வி மார்க்-3, எஸ்எஸ்எல்வி, ககன்யான் உள்பட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

ஆய்வுக்கு பயன்படுத்திய ராக்கெட்டுகளை மீண்டும் பயன்படுத்துவதற்கான செயல் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதைத் தொடர்ந்து, சந்திரயான்-3 திட்டம் ஜூலை மாதம் செயல்படுத்தப்பட உள்ளது.

**குலசேகரன்பட்டினம் ராக்கெட் ஏவுதளம்:** தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினம் ஏவுதளத்தைப் பொருத்தவரை 99 சதவீத நிலத்தை கையகப்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன. அங்கிருந்து தனியார் ராக்கெட்டுகளை ஏவுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தை தமிழக அரசு கையகப்படுத்தியுள்ளது.

வடிவமைப்புப் பணிகள் நிறைவுற்ற நிலையில் கட்டுமானத்துக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட உள்ளது. இரு ஆண்டுகளில் பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மனிதனை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தின் பல்வேறு கட்ட சோதனைகள் நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து வரும் ஜூலை மாதம் மாதிரி விண்கலம் ஒன்றை புவியில் இருந்து 14 கி.மீட்டர் தொலைவு அனுப்பி பாதுகாப்பாக தரையிறக்கும் சோதனை நடத்தப்பட உள்ளது. அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஆளில்லா விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்பி சோதனை மேற்கொள்ளப்படும் என்றார் அவர்.

Activate Windows
Go to Settings to activate Windows.

### தமிழகத்தின் உள்கட்டமைப்புத் திட்டங்களில் முதலீடு

# ஜப்பான் நிறுவனங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு

**சென்னை, மே 29:** தமிழகத்தின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் ஜப்பான் நிறுவனங்கள் முதலீடு செய்ய முன் வரவேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்தார்.

ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புடன் (ஜெட்ரோ) இணைந்து நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடு டோக்கியோவில்

திங்கள்கிழமை நடைபெற்றது. 200 ஜப்பான் நிறுவனங்களின் மூத்த மேலாண்மை அலுவலர்கள் மாநாட்டில் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: இந்தியாவும் ஜப்பானும் ஆசியாவின் இரண்டு பெரிய மற்றும் பழம்பெரும் ஜனநாயக நாடுகள். குறிப்பாக, ஜப்பான் நாட்டின் அதிகாரபூர்வ மேம்பாட்டு உதவியை அதிகம் பெறும் நாடு இந்தியாதான். இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதார உறவுகள், சமீப காலங்களில் மிகப்பெரும் எழுச்சி கண்டுள்ளது.

இந்திய சந்தைக்குள் நுழையும் ஜப்பானிய நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்தியாவில் தமிழ்நாடுதான் ஜப்பானிய முதலீடுகளுக்கு உகந்த முன்னணி மாநிலமாக விளங்குகிறது. தெற்காசியாவிலேயே, முதலீடுகளை ஈர்க்க உகந்த மாநிலமாக தமிழகத்தை உயர்த்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

நிசான், தோஷிபா, யமஹா, கோமாட்ஸு, ஹிடாச்சி போன்ற மிகப்பெரும் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தித் திட்டங்களை தமிழகத்தில் அமைத்துள்ளன. அது மட்டுமன்றி, ஜப்பான் - இந்தியா முதலீடு மேம்பாட்டுக் கூட்டாண்மை திட்டத்தின்கீழ் இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள 12 தொழில் நகரியங்களில், 3 நகரியங்கள் தமிழகத்தில் அமைந்துள்ளன.

தமிழக அரசைப் பொருத்தவரையில், எப்போதுமே, ஜப்பான் நாட்டின் உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்கு தொடர்ச்சியாக முயற்சி எடுத்து வருகிறது. பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில் அமைச்சகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம், ஜெட்ரோ நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், ஜப்பான் வணிக மற்றும் தொழில் பேரவை ஆகிய நிறுவன ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு அல்லாமல், கனகாவா, ஹிரோஷிமா மாகாணங்களுடன் பொருளாதார புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

ஜப்பான் நாட்டின் மிகப்பெரும் வங்கிகளான, பேங்க் ஆஃப் டோக்கியோ - மிட்சுபிஷி, மிசுஹோ வங்கி போன்ற வங்கிகளுடன் புரிந்துணர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பல மாகாணங்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைப்பதில் முக்கியப் பங்கு ஆற்றும்விதமாக 2030-2031 நிதியாண்டுக்குள், ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாறுவதற்கான ஒரு லட்சிய இலக்கை நிர்ணயித்து, அந்தப் பாதையில் பயணித்து வருகிறோம்.

கடந்த 2 ஆண்டுகளில், பல்வேறு துறைசார்ந்த முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகளை நடத்தி, இதுவரை 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன. ரூ.2.95 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. கடந்த 2 ஆண்டுகளில் மட்டுமே ரூ.5,596 கோடி முதலீடு மற்றும் 4,244 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 5 ஜப்பானிய நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளன.

**உள்கட்டமைப்பு முதலீடு:** ஜப்பானிய நிறுவனங்களுக்கு சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். ஜப்பானிய நிறுவனங்கள் பெரும்பாலும் உற்பத்தி சார்ந்த துறைகளில் மட்டுமே முதலீடுகளை மேற்கொள்கின்றன. இந்த நிலையை சற்றே விரிவுபடுத்தி, உள்கட்டமைப்பு மேம்பாடுத் திட்டங்களிலும் முதலீடுகளை மேற்கொள்ள வரவேண்டும். உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் முதலீடு செய்வது என்பது உங்களது உற்பத்தித் திட்டங்களை மேம்படுத்தவும் உதவிகரமாக அமையும்.

புதிய தொழில் பூங்காக்களை நாங்கள் அமைத்து வருகிறோம். அதிலும் உங்களது மேலான முதலீடுகளை வரவேற்கிறோம். உங்களது தொழிற்சாலைகளை எங்கள் மாநிலத்தில் அமைக்கும்போது அது தொடர்பான தலைமை அலுவலகத்தையும் எங்கள் மாநிலத்திலேயே அமைக்க வேண்டும் என்றார்.

முதலீட்டாளர்கள்மாநாட்டைத் தொடர்ந்து, ஜப்பான் நாட்டின் முக்கிய நிறுவனங்களின் தலைவர்களுடனான மதிய உணவு சந்திப்பு நிகழ்ச்சியிலும் முதல்வர் பங்கேற்றார்.

நிகழ்ச்சிகளில் தமிழக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டு துணைத் தூதர் மாசாயுகி டகா உள்பட பல்வேறு நிறுவனங்களின் அலுவலர்கள் பங்கேற்றனர்.

Activate Windows

# ஜப்பான் நிறுவனங்களுடன் ரூ.818 கோடி முதலீட்டு ஒப்பந்தங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பம்

**சென்னை, மே 29:** முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஜப்பான் நாட்டின் 6 நிறுவனங்களுடன் ரூ.818 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அரசு முறை பயணமாக ஜப்பான் நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பயணம் மேற்கொண்டு வருகிறார். அதன் தொடர்ச்சியாக டோக்கியோவில் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புடன் (ஜெட்ரோ) இணைந்து முதலீட்டாளர்கள் மாநாடு திங்கள்கிழமை நடத்தப்பட்டது. அதில், 200 ஜப்பான் நிறுவனங்கள் பங்கேற்றன.

அந்த நிறுவனங்களை தமிழகத்தில் அதிக அளவில் முதலீடு செய்ய முன்வரவேண்டும்என்று அழைப்பு விடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார். அதைத் தொடர்ந்து, தமிழ்நாடுதொழில்வழிகாட்டி நிறுவனத்துக்கும், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 6 தொழில் நிறுவனங்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் முன்னிலையில் கையொப்பமாகின.

அதன் விவரம்:

**டிரக் வாகன பாக ஆலை:** காஞ்சிபுரம் மாவட்டம் மாம்பாக்கத்தில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 13 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.113 கோடியே 90 லட்சம் முதலீட்டில் டிரக் வாகனங்களுக்கான பாகங்கள் உற்பத்தி செய்வதற்கான புதிய ஆலை நிறுவுவதற்கு கியோகுட்டோ சாட்ராக் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

**மிட்சுபா ஆலை விரிவாக்கம்:** திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள நான்கு மற்றும் இரண்டு சக்கர வாகனங்களுக்கான உதிரிபாகங்களைத் தயாரிக்கும் மிட்சுபா இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவன தொழிற்சாலையை ரூ.155 கோடி முதலீட்டில் விரிவாக்கம் செய்யும் திட்டத்துக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்.



டோக்கியோவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனம், ஷிமிசு நிறுவனம் இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம். உடன் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜா, கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஷிமிசு நிறுவன துணை பொதுமேலாளர் ஹிடோஷி இசாவா, துணை இயக்குநர் மட்சுனாகா கசுநோரி உள்ளிட்டோர்.

**கட்டுமானப் பொறியியல் வணிகம்:** கட்டுமானம், கட்டுமானப் பொறியியல் மற்றும் அதன் தொடர்புடைய வணிகத்தை தமிழகத்தில் மேற்கொள்வதற்காக ஷிமிசு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

**பாலிகார்பனேட் ஆலை:** ரூ.200 கோடி முதலீட்டில் பாலிகார்பனேட் தாள் தயாரித்தல், கூரை அமைப்புகள் தயாரித்தல், கட்டுமானத் துறையில் பயன்படுத்த எலக்ட்ரானிக் கூறுகளுக்கான எக்ஸ்ட்ருஷன் லைன்கள் தயாரிப்பதற்கான தொழிற்சாலை நிறுவுவதற்காக கோயீ நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

**உயர்தர எஃகு பாக ஆலை:** ரூ.200 கோடி முதலீட்டில் விண்வெளி, பாதுகாப்பு மற்றும் கட்டுமான உபகரணங்கள் துறையில் பயன்படுத்தப்படும் உயர்தர எஃகு பாகங்கள் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையை நிறுவுவதற்காக சடோ-ஷோஜி மெட்டல் ஒர்க்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

**எஃகு நெகிழ்வு குழல்கள் ஆலை:** ரூ.150 கோடி முதலீட்டில் சோலார், எஃகு ஆலைகள், விண்வெளி மற்றும் செமிகண்டக்டர் தொழில்களுக்கான துருப்பிடிக்காத எஃகு சிறப்பு நெகிழ்வான குழல்களை உற்பத்திசெய்வதற்கான தொழிற்சாலையை நிறுவுவதற்காக டஃப்ல் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மொத்தமாக 6 நிறுவனங்களுடன் ரூ. 818.90 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நிகழ்ச்சியில் தமிழக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்பட பலர் பங்கேற்றனர்.

# மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராக பிரவீண் குமார் ஸ்ரீவாஸ்தவா பதவியேற்பு

புது தில்லி, மே 29: மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராக பிரவீண்குமார் ஸ்ரீவாஸ்தவா திங்கள்கிழமை பதவியேற்றார்.



அஸ்ஸாம்-மேகாலயத்தின் 1988-ஆம் ஆண்டுப் பிரிவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரியான பிரவீண்குமார் ஸ்ரீவாஸ்தவா, கடந்த ஆண்டு டிசம்பர் முதல் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராக (பொறுப்பு) பதவி வகித்து வந்தார். இந்நிலையில், அவர் நிரந்தர மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராக (சிவிசி) திங்கள்கிழமை பதவியேற்றார். தில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு முன்னிலையில் ஸ்ரீவாஸ்தவா பதவியேற்றார். இந்த நிகழ்ச்சியில் குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர், பிரதமர் மோடி உள்ளிட்டோர் பங்கேற்றனர் என்று குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தில் சிவிசி, இரண்டு ஊழல் கண்காணிப்பு ஆணையர்கள் இருக்க வேண்டும். இதில் தற்போது ஒரு ஊழல் கண்காணிப்பு ஆணையர் பணியிடம் காலியாக உள்ளது. சிவிசி மற்றும் ஊழல் கண்காணிப்பு ஆணையர்கள் 4 ஆண்டுகள் அல்லது 65 வயதை எட்டும் வரை அப்பதவிகளை வகிக்கலாம்.

# தமிழகத்தில் இந்திய – ஜப்பானிய உச்சி மாநாடு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்

சென்னை, மே 29: இந்திய - ஜப்பானிய கூட்டு உச்சி மாநாட்டை தமிழகத்தில் நடத்த வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின், தனது டோக்கியோ பயணத்தின்போது வேண்டுகோள் விடுத்தார்.

சென்னையில் 2024 ஜனவரியில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் மே 23-ஆம்தேதி சிங்கப்பூர் சென்றார். அங்கு 2 நாள்கள் பயணத்தை முடித்துக்கொண்டு ஜப்பான் நாட்டின் ஒசாகாவுக்கு மே 25-இல் சென்றார். அங்கு இரண்டு நாள்கள் தொழில் முதலீடுகளை ஈர்த்தார். அதைத் தொடர்ந்து மே 27-இல் டோக்கியோவுக்கு வந்து தொழில் முதலீடுகளை ஈர்த்து, புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறார்.

இதன் தொடர்ச்சியாக, ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புத் தலைவர் (ஜெட்ரோ) இஷிகுரோ நோரிஹிகோவையும், செயல் துணைத் தலைவர் கசுயா நகஜோவையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் டோக்கியோவில் திங்கள்கிழமை சந்தித்தார்.

அப்போது, சென்னையில் 2024 ஜனவரியில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்க வருமாறு முதல்வர் அழைப்பு விடுத்தார்.



டோக்கியோவில் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புத் தலைவர் இஷிகுரோ நோரிஹிகோ, செயல் துணைத் தலைவர் கசுயா நகஜோ ஆகியோருடன் திங்கள்கிழமை உரையாடிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜா, கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண் இயக்குநர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயரதிகாரிகள்.

தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கு ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு அளித்து வரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து, முதல்வர் பேசியதாவது:

ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு இந்தியாவுடன் இணைந்து மிகவும் தீவிரமாகப் பணியாற்றி வருகிறது.

தமிழகத்தில்தொழில்தொடங்க விரும்பும் ஜப்பானிய நிறுவனங்கள் தங்களது வர்த்தக செயல்பாடுகளை எளிதில் மேற்கொள்ள முக்கியப் பங்கை ஆற்றி வந்துள்ளன. இதனை மின்னணுவியல், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ஆட்டோமொபைல், கனரக பொறியியல் உள்ளிட்ட துறைகளுக்கும் விரிவுபடுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

தொழில் 4.0-ஐ நோக்கி தமிழகத்தில் உள்ள அதிக அளவிலான சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை முன்னேற்ற இந்தியாவின் ஐ.டி. திறன்களும் ஜப்பானின் உற்பத்தி நிபுணத்துவமும் உதவும். இதைப் போன்ற துறைகளில் நாம் ஒன்றிணைந்து செயல்பட முடியும் என நம்புகிறேன். உற்பத்தியில் சிறந்த பங்குதாரர்களாக ஜப்பானியர்கள் இருந்து வருகின்றனர். அதைப்போல தமிழகத்தில் திறன்மிகுந்த மனிதவளம் உள்ளதால் 4.0 போன்ற தொழில்நுட்பப் பகுதிகள் மற்றும் மேம்பட்ட உற்பத்திக்கான ஒரு மையத்தை தமிழகத்தில் அமைக்க வேண்டும்.

இந்தியா - ஜப்பானிய கூட்டு உச்சி மாநாட்டை தமிழகத்தில் நடத்த வேண்டும் என்றார் முதல்வர்.

அதைத் தொடர்ந்து, ஜெட்ரோ தலைவர் இஷிகுரோ நோரிஹிகோ பேசும்போது, தமிழகத்தில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள ஜப்பான் நாட்டு நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் அளித்து அழைப்பு விடுத்ததற்கும், ஜப்பான் நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க தமிழக அரசு அளித்து வரும் ஆதரவுக்கும் நன்றி. சென்னையில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாடு-2024 வெற்றி பெற வாழ்த்துகள் என்றார்.

நிகழ்வில் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு உள்ளிட்ட உயரதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

# 2030–க்குள் நிலவுக்கு மனிதர்கள்

**சீனா அறிவிப்பு**

**பெய்ஜிங், மே 29:** வரும் 2030–ஆம் ஆண்டுக்குள் நிலவுக்கு மனிதர்களை அனுப்ப திட்டமிட்டுள்ளதாக சீனா திங்கள்கிழமை அறிவித்தது.

இது குறித்து, விண்வெளிக்கு மனிதர்களை அனுப்புவதற்கான சீன விண்வெளி ஆய்வு மையப் பிரிவான சிஎம்எஸ்ஏ - வின் இணை இயக்குநர் லின் ஷிகியாங் கூறியதாவது:

வரும் 2030–ஆம் ஆண்டுக்குள் நிலவுக்கு விண்வெளி வீரர்களை அனுப்பி அங்கு பரிசோதனைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

நிலவில் ஆய்வுகள் மேற்கொள்வது மட்டுமின்றி, வேற்று கிரகத்துக்கு மனிதர்களை அழைத்துச் செல்வதற்கான தொழில்நுட்ப சோதனைகளையும் மேற்கொள்வது அந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் தொழில்நுட்பம் மிகப் பெரிய முன்னேற்றத்தை அடையும்.

நிலவு உருவானது எவ்வாறு, அதில் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்றவை குறித்து கூடுதல் விவரங்களை இந்த திட்டத்தின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

நிலவுக்கும், பூமிக்கும் இடையே சுற்றுலா திட்டங்களை அறிமுகப்படுத்துவது, நிலவில் இருப்பிடங்களை அமைத்து மனிதர்கள் தற்காலிகமாகத் தங்குவது, இயந்திர மனிதர்களுடன் மனிதர்களும் இணைந்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்வது ஆகியவற்றுக்கு 2030–இல் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டம் அடித்தளம் அமைக்கும் என்றார் லின் ஷிகியாங்.

ஏற்கெனவே, நிலவுக்கு ஆளில்லாத விண்கலங்களை சீனா வெற்றிகரமாக அனுப்பியுள்ளது. நிலவில் நகர்ந்து சென்று ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஓர் ஆய்வுக் கலத்தையும் சீனா வெற்றிகரமாக தரையிறக்கியுள்ளது நினைவுகூரத்தக்கது.

முன்னதாக, நிலவில் சர்வதேச ஆய்வு நிலையம் அமைக்க திட்டமிட்டிருப்பதாக கடந்த 2021–ஆம் ஆண்டில் ரஷியாவும், சீனாவும் கூட்டாக அறிவித்தன. நிலவின் பரப்பிலோ அல்லது அதனை சுற்றி வரும் வகையிலோ அந்த சர்வதேச நிலவு ஆய்வு நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தத்தை இரு நாடுகளும் மேற்கொண்டுள்ளன. நிலவுக்கு முதல்முறையாக அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் கடந்த 1968–இல் விண்வெளி வீரர்களை அனுப்பியது.

பின்னர் அப்பல்லோ-11 விண்கலத்தில் அனுப்பப்பட்ட நீல் ஆர்ம்ஸ்ட்ராங்கும் பஸ் ஆல்ட்ரினும் கடந்த 1969–இல் முதல்முறையாக நிலவில் தரையிங்கினர்.

அதன் பிறகு அமெரிக்கா 6 முறை நிலவுக்கு விண்வெளி வீரர்களை அனுப்பியது.

எனினும், 1972–ஆம் ஆண்டுக்குப் பிறகு நிலவுக்கு மனிதர்களை அனுப்புவதை நிறுத்திய அமெரிக்கா, வரும் 2025–ஆம் ஆண்டில் மீண்டும் அத்தகைய திட்டத்தை செயல்படுத்தப்போவதாக அறிவித்துள்ளது.

இந்தச் சூழலில், சீனாவும் அது போன்ற திட்டத்தை தற்போது அறிவித்துள்ளது. சீனாவின் அந்த திட்டம் வெற்றி பெற்றால், நிலவுக்கு மனிதர்களை அனுப்பிய உலகின் 2–ஆவது நாடு என்ற பெருமையை அந்த நாடு பெறும்.





# சென்னை 5-ஆவது முறையாக சாம்பியன்

அகமதாபாத், மே 29: ஐபிஎல் போட்டியின் 16-ஆவது சீசன் இறுதி ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் குஜராத் டைட்டன்ஸை வீழ்த்தி திங்கள்கிழமை சாம்பியன் ஆனது.

சென்னைக்கு இது 5-ஆவது சாம்பியன் பட்டமாகும். இதை யடுத்து ஐபிஎல் போட்டியில் அதிக முறை கோப்பை வென்ற மும்பை அணியின் சாதனையை (5 முறை) தற்போது சென்னை சமன் செய்துள்ளது.

இந்த ஆட்டத்தில் முதலில் குஜராத் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 214 ரன்கள் சேர்த்தது. பின்னர் மழையால் ஆட்டம் பாதிக்கப்பட, சென்னைக்கான இலக்கு 15 ஓவர்களில் 171 ரன்களாக நிர்ணயிக்கப்பட்டது. அதில் சென்னை 15 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 171 ரன்கள் சேர்த்து 'த்ரில்' வெற்றி பெற்றது.

முன்னதாக, சென்னை - குஜராத் அணிகள் மோதிய இந்த இறுதி ஆட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதாக இருந்து, மழை காரணமாக 'ரிசர்வ்' நாளான திங்கள்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அவ்வாறு திங்கள்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் டாஸ் வென்ற சென்னை, ஃபீல்டிங்கை தேர்வு செய்தது.

குஜராத் இன்னிங்ஸில் ரித்திமான் சாஹா - ஷுப்மன் கில் கூட்டணி முதல் விக்கெட்டுக்கு 67 ரன்கள் சேர்த்தது. இதில் சென்னை பௌலர்களுக்கான அச்சுறுத்தலாக கருதப்பட்ட ஷுப்மன் கில் 7 பவுண்டரிகளுடன் 39 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். ரவீந்திர ஜடேஜா வீசிய அந்த ஓவரில் கிரீஸை விட்டு சற்று விலக, பின்னே வந்த பந்தை பிடித்து கண்ணிமைக்கும் நேரத்தில் ஸ்டம்பிங் செய்தார் தோனி.

ஒன் டவுனாக களம் புகுந்த சாய் சுதர்சன் விஸ்வரூபம் எடுத்து, சென்னை பௌலிங்கை பவுண்டரி சிக்ஸர்களாக விளாசத் தொடங்கினார். இந்நிலையில், அரைசதம் கடந்த சாஹா 5 பவுண்டரிகள், 1 சிக்ஸர் உள்பட 54 ரன்களுக்கு வீழ்ந்தார்.

அடுத்து கேப்டன் ஹார்திக் பாண்டியா களம் புகுந்தார். அதிரடியாக விளாசி அணியின் ஸ்கோரை உயர்த்திய சாய், 47 பந்துகளுக்கு 8 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உள்பட 96 ரன்களை எட்டி எல்பிடபிள்யூ ஆனார்.

தொடர்ந்து வந்த ரஷீத் கான், கடைசி ஓவரின் கடைசி பந்தில் டக் அவுட்டானார். ஓவர்கள் முடிவில் பாண்டியா 2 சிக்ஸர்கள் உள்பட 21 ரன்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தார். சென்னை தரப்பில் மதீஷா பதிரானா 2, ரவீந்திர ஜடேஜா, தீபக் சஹர் ஆகியோர் தலா 1 விக்கெட் கைப்பற்றினர்.

பின்னர் மழையால் ஆட்டம் தாமதமானது. இரவு 11.45 மணியளவில் சென்னை அணிக்கு 15 ஓவர்களில் 171 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, ஆட்டம் நள்ளிரவு 12.10 மணிக்கு தொடங்கியது.

சென்னை இன்னிங்ஸில் ருதுராஜ் கெய்க்வாட் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 26, டெவன் கான்வே 4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 47 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

அஜிங்க்ய ரஹானே 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உள்பட 27 ரன்களுக்கு பெவிலியன் திரும்பினார். ஓய்வு பெறும் அம்பட்டி ராயுடு 1 பவுண்டரி, 2 சிக்ஸர்களுடன் 19 ரன்களுக்கு வீழ்ந்தார். தொடர்ந்து வந்த கேப்டன் தோனி 'கோல்டன் டக்' ஆகி ரசிகர்களுக்கு அதிர்ச்சி அளித்தார்.

ஓவர்கள் முடிவில் ஷிவம் துபே 2 சிக்ஸர்களுடன் 32, ரவீந்திர ஜடேஜா 1 பவுண்டரி, 1 சிக்ஸருடன் 15 ரன்கள் விளாசி அணியை வெற்றி பெறச் செய்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

குஜராத் தரப்பில் நூர் அகமது 2, மோஹித் சர்மா 3 விக்கெட் எடுத்தனர்.

## மும்பையின் சாதனை சமன்



வெற்றிக்கு, கடைசி இரு பந்துகளில் 10 ரன்கள் தேவையிருக்க முறையே 1 சிக்ஸர், 1 பவுண்டரி விளாசி அணியை வெற்றி பெறச் செய்த மகிழ்ச்சியில் ஜடேஜா.

## இறுதியில் அதிகபட்சம்

இந்த ஆட்டத்தில் குஜராத் 214/4 ரன்கள் அடித்ததே, ஐபிஎல் வரலாற்றில் இறுதி ஆட்டத்தில் அடிக்கப்பட்ட அதிகபட்ச ஸ்கோராகும். இதற்கு முன் 2016 இறுதி ஆட்டத்தில் பெங்களூருக்கு எதிராக ஹைதராபாத் 208/7 ரன்கள் அடித்ததே அதிகபட்சமாக இருந்தது.